

புதுக்கோட்டை தெற்கு மாவட்டம், திருமயம் தெற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் கோடைகால நீர், மோர் பந்தலை சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி திறந்து வைத்து பொதுமக்களுக்கு நீர், மோர், பானங்கள், பழ வகைகள் வழங்கினார். உடன் ஒன்றியச் செயலாளர்கள் ஆறு சிதம்பரம், ஆர்.கணேசன், கே.ஆர்.ராமசாமி, தேவி, சிவக்குமார், ஆக்காட்டி ஆறுமுகம், ஜான் பீட்டர், சிக்கந்தர், முல்லை ரமேஷ், அண்ணாதுரை மற்றும் ஒன்றிய பொறுப்பாளர்கள், நிர்வாகிகள், உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் அவர்கள் கடலூர் மஞ்சக்குப்பம் மைதானத்தில் நடைபெற்ற அரசு விழாவில் குறிஞ்சிப்பாடி வருவாய் வட்டத்திற்கான புதிய வட்டாட்சியர் அலுவலகம் ரூ.6.50 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும் என்று அறிவித்ததிற்கிணங்க, குறிஞ்சிப்பாடி பேருந்து நிலையம் அருகாமையில் உள்ள புது சுப்பிரமணிய கோயில் இடத்தில் புதிய வருவாய் வட்டாட்சியர் அலுவலகக் கட்டடம் அமைத்திட பொதுமக்கள் கோரிக்கை வைத்ததிற்கிணங்க, வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் இவ்விடத்தில் விரைவில் உரிய அனுமதியுடன் புதிய வருவாய் வட்டாட்சியர் அலுவலகக் கட்டடம் அமைக்கப்படும் என்றார். உடன் பேரூராட்சி தலைவர் கோகிலாகுமார், துணை தலைவர் ராமர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் முக்கிய பிரமுகர்கள் உள்ளனர்.

### புதுக்கோட்டை தெற்கு மாவட்டம் லெம்பலக்குடியில்

# தி.மு.க. மாணவரணி சார்பில் - உறுப்பினர் சேர்க்கை!

## அமைச்சர் எஸ்.ரகுபதி தொடங்கி வைத்தார்!

புதுக்கோட்டை, ஏப்.25-

தமிழ்நாட்டில் மு.க. ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான தி.மு.க. அரசு நாட்டிலுள்ள மற்ற மாநிலங்களுக்கு முன்னுதாரணமாக செயல்பட்டு பாராட்டைப் பெற்று வருகிறது. இதில் தமிழ்நாடு அரசு மாணவர்களின் கல்விக்கு அதிகளவு முக்கியத்துவம் அளித்து வருவது குறிப்பிடத்தக்கது.

இதனால் மாணவர்கள் கழக தலைவர் தளபதி அவர்களின் தலைமையிலான தி.மு.க. அரசிற்கு ஆதரவளித்து வருகின்றனர்.

இந்நிலையில் தி.மு.க. அரசின் உறுப்பினர் எண்ணிக்கையை பலப்படுத்தும் விதமாக திமுக மாணவர் அணியினர் மாணவர் உறுப்பினர் சேர்க்கையை விரிவுபடுத்த வேண்டும் என தலைமைக் கழகம் சார்பில் மாணவர் அணியினருக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டது. இதன் அடிப்படையில் திருமயம் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட லெம்பலக்குடி கிராமத்தில் சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி தலைமையில் தி.மு.க. மாணவரணி சார்பில் மாணவர் உறுப்பினர் சேர்க்கை நடைபெற்றது.

அப்போது மாணவர்களிடையே அமைச்சர் ரகுபதி கல்லூரி மாணவர்களுக்கு முதலமைச்சர் தளபதி தலைமையிலான தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வரும் நான் முதல்வன், புதுமைப் பெண் உள்ளிட்ட திட்டங்கள் குறித்து விளக்கினார். மாணவரணி மாநில துணைச் செயலாளர் மண்ணை சோலைராஜன் மாணவர் உறுப்பினர் சேர்க்கையை மேற்பார்வையிட்டார். மாவட்ட மாணவரணி அமைப்பாளர் ஆ. கலைச்செல்வன் முன்னிலை வகித்தார். நிகழ்ச்சியில் திருமயம் ஒன்றிய செயலாளர்கள் அழகு சிதம்பரம், இரா. கணேசன், இரா.மேகநாதன், கே.ஆர்.ராமசாமி, மாணவரணி ராஜா பெரியண்ணன், பாலசுப்பிரமணியன், வின்சென்ட் உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டை மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர் ஆர்.எம்.கே கார்த்திக்குமார் செய்திருந்தார்.

### புரட்சிக்கவிஞர் பிறந்த நாள் - தமிழ் வார விழாவாகக் கொண்டாடப்படும்!

# முதலமைச்சரின் அறிவிப்பை உச்சிமோந்து வரவேற்கிறோம்!

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி பாராட்டு!

சென்னை, ஏப். 25 -



புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் பிறந்த நாளையொட்டி (ஏப்ரல் 29) உலகத் தமிழ் வார விழாவாகக் (ஏப்.29 தேதி முதல் மே 5 ஆம் தேதிவரை) கொண்டாடப்படும் என்று அறிவித்துள்ள நமது சமூகநீதி காத்த சரித்திர நாயகர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு, நாம் உச்சிமோந்து, நெஞ்சார்ந்த வாழ்த்துகளைத் தெரிவிப்பதில் எல்லையற்ற மகிழ்ச்சியடைகிறோம். திராவிடர் இயக்க ஆட்சி வரலாற்றில் இது ஓர் இணையற்ற புதிய பொன்னேடு. உலகம் முழுவதும் உள்ள தமிழ் உணர்வாளர்களின் பெருவிருப்பத்தைச் சிறப்பாக நிறைவேற்ற விதி 110-இன்கீழ் அறிவித்த நமது இணையற்ற முதலமைச்சரைப் பாராட்டி, வரவேற்று, நன்றி செலுத்தி வாழ்த்துவார்கள் என்பது திண்ணம்.

இந்நாள் (22.4.2025) ஓர் இனிய, வரலாற்றுச் சாதனை நாள் என திராவிடர் கழக தலைவர் கி.வீரமணி அவர்கள் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

### கடலூர் மாவட்டம் குறிஞ்சிப்பாடி புதிய வருவாய் வட்டாட்சியர்

# அலுவலகக் கட்டடம் ரூ.6.50 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்!

## அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிவிப்பு!

கடலூர், ஏப். 25 -

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கடலூர், மஞ்சக்குப்பம் மைதானத்தில் 21.02.2025 அன்று நடைபெற்ற அரசு விழாவில் குறிஞ்சிப்பாடி வருவாய் வட்டத்திற்கான புதிய வட்டாட்சியர் அலுவலகம் ரூ.6.50 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும் என அறிவித்தார்.

குறிஞ்சிப்பாடி பேருந்து நிலையம் அருகாமையில் உள்ள புது சுப்பிரமணிய கோயிலுக்கு சொந்தமான இடத்தில் புதிய வருவாய் வட்டாட்சியர் அலுவலகக் கட்டடம் கட்டிட வேளாண்மை உழவர் நலத் துறை அமைச்சர் எம்.ஆர். கே.பன்னீர்செல்வம் அவர்களிடம் அமைத்திட பொது மக்கள் கோரிக்கை வைத்தனர்.

அதற்கிணங்க, வேளாண்மை உழவர் நலத் துறை அமைச்சர் எம்.ஆர்.



கே.பன்னீர்செல்வம் அவ்விடத்தினை ஆய்வுசெய்து, உரிய அனுமதியுடன் விரைவில் புதிய வருவாய் வட்டாட்சியர் அலுவலகம் அமைக்கும் பணிக்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் பேரூராட்சி தலைவர் கோகிலா குமார், துணை தலைவர் ராமர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், நிர்வாக அறங்காவலர்கள், மற்றும் முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

### வெள்ளகோவில் - குண்டடம் - காங்கேயம் ஒன்றியங்களுக்குட்பட்ட பகுதிகளில்

# ரூ.11.82 கோடி மதிப்பீட்டில் பல்வேறு புதிய திட்டப்பணிகள்!

## அமைச்சர் மு.பெ.சாமிநாதன் துவக்கி வைத்தார்!

திருப்பூர், ஏப். 25 -

திருப்பூர் மாவட்டம், வெள்ளகோவில், குண்டடம், காங்கேயம் ஒன்றியங்களுக்குட்பட்ட பகுதிகளில் ரூ.11.82 கோடி மதிப்பீட்டில் பல்வேறு புதிய திட்டப்பணிகளை துவக்கி வைத்து ரூ.5.58 இலட்சம் மதிப்பீட்டில் முடிவுற்ற பணியை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் மு.பெ.சாமிநாதன் திறந்து வைத்தார்.

திருப்பூர் மாவட்டம், வெள்ளகோவில் ஒன்றியம், வள்ளியரச்சல் ஊராட்சி, தென்னங்கரைப்பாளையத்தில் முதலமைச்சரின் கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.41.88 இலட்சம் மதிப்பீட்டில் குட்டப்பாளையம், மாந்தபுரம் முதல் தென்னங்கரைப்பாளையம் சாலை வரை சாலை அமைக்கும் பணி, வேலப்பநாயக்கன்வலசு ஊராட்சி, சேனாபதி பாளையம், வேதவிநாயகா நகரில் கனிமம் மற்றும் சுரங்கம் நிதியின் கீழ் ரூ.20.00 இலட்சம் மதிப்பீட்டில் சேனாபதிபாளையம், வேதவிநாயகா நகர் பகுதியில் 2 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட தரைமட்டத் நீர்தேக்கத் தொட்டி அமைக்கும் பணி, முதலமைச்சரின் கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.1.16 கோடி மதிப்பீட்டில் முத்தூர் - மூலனூர் முதல் என்.ஜி.எம் சாலை வழியாக ராமலிங்கபுரம் சாலை அமைக்கும் பணி,

வேலப்பநாயக்கன் வலசு ஊராட்சி, மயில்ரங்கத்தில் கனிமம் மற்றும் சுரங்கம் நிதியின் கீழ் ரூ.19.95 இலட்சம் மதிப்பீட்டில் மயில்ரங்கம் மயானத்திற்கு அணுகு சாலை அமைக்கும் பணி, காங்கேயம் ஒன்றியம், பரசேர்வழி ஊராட்சி, சிவியார் பாளையத்தில் ஊரக வளர்ச்சித்துறையின் சார்பில் ரூ,8.92 கோடி மதிப்பீட்டில் பரஞ்சேர்வழி குருக்கள்பாளையம் சாலை முதல் பூச்சக்காட்டுவலக்கு இடையில் தம்பைய்காடு வழியாக நொய்யல் ஆற்றின் குறுக்கே உயர்மட்ட பாலம் அமைக்கும் பணி, குண்டடம் ஒன்றியம், வடசின்னாரிபாளையம் ஊராட்சி, வீணம்பாளையத்தில் முதலமைச்சரின் கிராம் சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.85.73 இலட்சம் மதிப்பீட்டில் வீணம்பாளையம் முதல் சுள்ளி பெருக்கிபாளையம் வரை சாலை அமைக்கும் பணி என மொத்தம் ரூ.11.76 கோடி மதிப்பீட்டில் புதிய பணிகளை துவக்கி வைத்தும்,

வேலப்பநாயக்கன் வலசு ஊராட்சி, மூத்த நாயக்கன் வலசில் ரூ.5.58 இலட்சம் மதிப்பீட்டில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் மூத்த நாயக்கன்வலசு பகுதியில் புதிய ஆழ்துளைக் கிணறு அமைத்து 7.5 ஹெச்.பி மின்மோட்டார் பொருத்தப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு குடிநீர் வழங்கும் பணியினை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர், கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் மு.பெ.சாமிநாதன் திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில், திருப்பூர் தெற்கு மாவட்டச் செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன், மாவட்ட துணை செயலாளர் ராசி கே.ஆர். முத்துக்குமார், ஒன்றிய கழக செயலாளர்கள் கே. கே.சிவானந்தன் காங்கேயம் தெற்கு, கருணை பிரகாஷ் காங்கேயம் வடக்கு, சு.சந்திரசேகரன் குண்டடம் மேற்கு, சிவ.செந்தில்குமார் குண்டடம் கிழக்கு, கே.சந்திரசேகரன் வெள்ளக்கோவில், வெள்ளக்கோவில் நகர கழக செயலாளர் சபரி எஸ்.முருகானந்தம், முத்தூர் பேரூர் கழகச் செயலாளர் செண்பகம் பாலு, வெள்ளக்கோவில் ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் ஆதவன் ப.ஜெகதீஷ்,

மாவட்ட தொண்டரணி அமைப்பாளர் ரமேஷ், காங்கேயம் வட்டாட்சியர் மோகனன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ராகவேந்திரன், சரவணன் (வெள்ளகோவில்), அனுராதா, ராஜேந்திரன் (காங்கேயம்), நாகலிங்கம் (குண்டடம்), உதவி பொறியாளர்கள் கிருஷ்ணமூர்த்தி, மகேஷ்வரி (வெள்ளகோவில்), சரவணக்குமார் (காங்கேயம்), கார்த்திக்ராஜா (குண்டடம்) உள்பட மாவட்ட, ஒன்றிய, கிளை, கழக நிர்வாகிகள், கழக துணை அமைப்புக்களின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், துறை சார்ந்த அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.



தருமபுரி கிழக்கு மாவட்டம் நல்லம்பள்ளி மத்திய ஒன்றியம் ஏலகிரி ஊராட்சியில் கடுதுகாரம்பாட்டி ஓமல்நத்தம் இடையே பழுதடைந்துள்ள சாலையை சீரமைக்க வேண்டி அக்கிராம மக்கள் வைத்த கோரிக்கையை ஏற்று தருமபுரி கிழக்கு மாவட்ட கழக பொறுப்பாளர் தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் ஆ.மணி நேரில் சென்று சாலையை ஆய்வு செய்து மிகவிரைவில் சாலை வசதியை செய்து தருவதாக உறுதி அளித்தார். நிகழ்வில் ஒன்றிய கழக செயலாளர்கள் கே.பி. மல்லமுத்து, ஏ.எஸ்.சண்முகம், வைகுந்தம், பொதுக்குழு உறுப்பினர் நட்ராஜ், ஒன்றிய நிர்வாகிகள் மணி, வெங்கடேசன், உள்ளிட்ட கழகத்தினர் மற்றும் ஊர் பொதுமக்கள் இருந்தனர்.


